# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
## PROSECUTION WITNESS

STC.No. 11/2021 Crime No. - Station -

| Name | PW-1-ஜெகநாதன் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.06.2025 |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் STC 10/ 2021, STC 11/2021 மற்றும் STC 25/2021 தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அந்த மூன்று வழக்குகளில் உள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து தான் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் குறைந்த வட்டிக்கு கடன் கொடுப்பதாக சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். வட்டி கடன் நடத்துவதற்கு உரிய அதிகாரியிடம் இருந்து உரிய உரிமம் வாங்கி உள்ளன என்றால் வாங்கவில்லை. நான் வீட்டில் சிறிய அளவு கடன் கொடுத்து நடத்தி வருகிறேன்.

நான் தாக்கல் செய்த மூன்று வழக்குகளிலும் காசோலை தேதி 27.12.2019 என்றால், சரிதான். மூன்று வழக்குகளின் காசோலைகளின் எண்ணிக்கை மொத்தம் 28 ஆகும். 28 காசோலைகளும் ஒரே தேதியில் தான் கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. ஆறு மாத காலமாக கொடுத்ததில் அவர் ஒரு முன் தேதியிட்டு எனக்கு காசோலை கொடுத்தார். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால், செலுத்தி வருகிறேன். எதிரிக்கு கொடுத்த பணத்தை எனது வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால், காட்டவில்லை. இது நான் தோட்டத்தை விற்ற வகையில் வந்த பணம் என்பதால் காட்டவில்லை.

ஆறு மாதமாக கொடுத்த பண விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், வாங்கியதை சொல்லி இருப்பேன், ஆனால் மாதத்தை நான் குறிப்பிடவில்லை. எதிரி எந்தெந்த தேதிகளில் பணம் பெற்றார் என்றும் எந்தெந்த தேதிகளில் காசோலைகள் கொடுத்தார் என்றும் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். கடனை நான் வட்டிக்கு கொடுத்தேனா என்றால், வட்டிக்கு கொடுக்கவில்லை, நண்பர் என்ற அடிப்படையில் கொடுத்தேன்.

நான் எதிரி கொடுத்த 28 காசோலையை 27.12.2019 ஆம் தேதி எனது வங்கி கணக்கில் தாக்கல் செய்து அந்த 28 காசோலைகள் 30.12.2019 ஆம் தேதி திருப்பப்பட்டது என்றால், சரிதான். நான் மேற்கண்ட 28 காசோலைகளை வங்கியில் செலுத்துவதற்கு முன்பு எதிரி எனக்கு கடந்த 06.12.2019 சட்ட அறிவிப்பு கொடுத்தாரா என்றால், கொடுத்தார். நான் மேற்கண்ட சட்ட அறிவிப்பிற்கு 06.01.2020 ஆம் தேதி எனது வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் காசோலை தாக்கல் செய்த விவரத்தையோ காசோலைகள் திருப்பட்ட விபரத்தையோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால், கூறவில்லை.

இரண்டாவது முறை எதிரி கொடுத்த காசோலையை எனது வங்கி கணக்கில் தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரிக்கு ஏதேனும் அறிவிப்போ அல்லது தகவலோ கொடுத்தேனா என்றால், எதிரி கொடுத்த அறிவுறுத்தலின் அடிப்படையில் தான் நான் காசோலையை தாக்கல் செய்தேன். மேற்கண்ட சங்கதியை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். நான் இரண்டாவது முறை 19.03.2020 திருப்பப்பட்ட காசோலைகளுக்கு கடந்த 08.05.2020 ஆம் தேதி தான் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால், சரிதான்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in open court
read over to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.19 06:15:12 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.